பட்டு, பருத்திப் புடைவைகள் மற்றும் றெடிமேட் ஆடைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம்

ஞானம் ஆடையகம்

54, சோதியா தெரு, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்! நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கோயில் தேவைகளுக்கான குடை, கொடி, ஆலவட்டம், வாகுமாலை என்பவற்றுக்கு

ஞானம் ஆடையகம்

54, சோதியா தெரு, யாழ்ப்பாணம்.

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 20 திங்கட்கிழமை (03 - 04 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 127

# 4 ஆம் கட்ட பேச்சுக்கள் குறித்து புலிகளுக்கு அரசு பதில் கடிதம்

## முதலாம் திகதி நடத்த முடியாதது குறித்தும் அதில் விளக்கப்பட்டுள்ளது

கொழும்பு, ஏப்ரல். 3

நான்காவது கட்ட சமாதானப் பேச்சுக்களை நடத்துவது குறித்து அரசாங்கம், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் கடந்த மாதம் 28 ஆம் திகதியிட்டு அனுப்பிய கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையில், அரசாங்கம் கடந்த சனிக்கிழமை இக் கடிதத்தை அனுப்பியதாகவெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் தெரிவித்திருக்கிறார்

பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு தலைவர் பிரபாகரன் குறிப்பிட்ட ஏப்ரல் முதலாம் திகதியன்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முடியாமற் போனது ஏன் என்பது குறித்தும், அரசு எழுதிய பதில் கடிதத்தில் விளக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தகவல் வெளியிட்டார்.

எரிபொருள் தடையை நீக்குவது. மீன்பிடித் தடையை முற்றாக நீக்குவது என்ற சந்திரிகாவின் முடிவை வரவேற்றும் —

அரசுதனதுவாக்குறுதிகளை நிறைவேற்ற இம்மாதம் 19 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியும்—

நான்காம் கட்டப்பேச்சுவார்த்தையை இம்மாதம் முதலாம் திகதி நடத்தலாம் என்று தெரிவித்தும்—

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் கடந்த மாதம் 28 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கு கடிதம் அனுப்பிஇருந்தது தெரிந்ததே

இந்தக் கடிதத்துக்கே அரசாங்கம் முதலாம் திகதியன்று பதில் அனுப்பி வைத்திருப்பதாக அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் குறிப்பிட்ட முதலாம் திகதியன்று அரசாங்கக் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு செல்லமுடியாத காரணத்தை விளக்கியும்—

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம்களைப் புறக்கணித்து விட்டு சமாதான முயற்சியில் வெல்லமுடியாது

### பி.பி.ஸிக்கு அஷ்ரப் பேட்டி

கொழும்பு, ஏப். 3

வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிம் மக்களைப் புறக்கணித்து விட்டு அரசாங்கம் சமாதான முயற்சிகளில் வெற்றி அடைய முடியாது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் நேற்று பி. பி. ஸி. சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னர் ஜே. ஆர். ஜெயவர்த்தனா இனப்பிரச்சினைக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு இல்லாமலேயே தீர்வு காணமுயற்சித்தார். இலங்கை —இந்திய ஒப்பந்தம் தோல்வி கண்டதே இதனால் தான்.

இனப்பிரச்சினைக்கு முஸ்லிம்களின் ஒத்துழைப்பின்றி எதுவித தீர்வையும் காண முடியாது"

வடக்கு - கிழக்கில் உள்ள முஸ்லிம்களுக்காக இன்று குரல் கொடுக்கவுள்ள ஒரே கட்சி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே.

வடக்கு - கிழக்கு இணைப்பில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராகும் ஆபத்து இருந்து வருகிறது.

இவ்வாறு அஷ்ரப் மேலும் தெரிவித்தார். (இ- 6)

## ஹில்லரி கிளின்ரன் நாளை இலங்கை வருகிறார்

கொழும்பு, ஏப்.3

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனின் மனைவி ஹில்லரி கிளின்ரன் நாளை செவ்வாய்க்கிழமை இலங்கை வருகிறார்.

ஏற்கனவே இவர் இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ். ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

## சமாதான முயற்சி குறித்து அறிய அயர்லாந்துக்கு குழு

கொழும்பு, ஏப். 3

இலங்கையில் இருந்து வெகுஜன தொடர்பு துறையைச் சார்ந்தவர்கள் மற்றும் சமாதான அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய தூதுக்குழு ஒன்று அயர்லாந்து சென்றுள்ளது.

அயர்லாந்திலிருந்து இக் குழு தென் ஆபிரிக்கா செல்லும்.

இந்த நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட சமாதான நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து அறிவதற்காகவே இந்த குழு இந்த நாடுகளுக்கு செல்கிறது. (இ-3)

## சூடான கருத்துப்பரிமாறல் சண்டைக்கே வழி வகுக்கும்

### தமிழ் எம். பி. ஒருவர் கருத்து

மணிலா, ஏப். 3

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான சூடான கருத்துப் பரிமாறல்கள் மீண்டும் சண்டை ஒன்று தொடங்க வழிவகுக்கும் என பெயர் குறிப்பிட விரும்பாத தமிழ் எம். பி. ஒருவர் குறிப்பிட்டதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

புலிகள் அரசியல் பேச்சுவார்த்தைக்கு இணங்க மறுப்பதும் —

அரசு முற்றாக பொருளாதாரத் தடையை நீக்க மறுப்பதும்—போருக்கான அறிகுறிகளே என்றும் அந்த எம்.பி. கூறியதாக வெரித்தாஸ் தெரிவித்தது. (இ-7)

## மூச்சந்தி முரளி



ஒரு பக்கத்தால் குறைத்து இஞ்னொரு பக்கத்தால் கூட்டு வினம் பாருங்கோ......!

## பொருள்களின் விலை குறைப்பு

கொழும்பு, ஏப். 3

அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் சனிக்கிழமை முதல் குறைத்துள்ளது

ஒரு கிலோ பருப்பின் சில்லறை விலை 35 ரூபாவில் இருந்து 30 ரூபாவாகவும்.—

செத்தல் மிளகாயின் விலை 115 ரூபாவில் இருந்து 110 ரூபாவாகவும் —

சீனியின் விலை31 ரூபாவில் இருந்து 29 ரூபா 50 சதமாகவும் —

மாவின் மொத்த விற்பனை விலை கிலோவுக்கு 7 ரூபா 45 சதத்தில் இருந்து 7 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளது என்று கூ. மொ. வி. நிறுவனம் அறிவித்துள்ளது. (இ-3)

# பீஹாரில் ஜனதாதள் ஆட்சியைப் பிடித்தது

புதுடில்லி, ஏப்.3

பீஹார் மாநில ஆட்சியை ஜனதாதள் கைப்பற்றியுள்ளது.

இந்த மாநிலத்தில் நடந்த தேர்தலில் ஜனதாதள் மற்றும் கட்சிகளுடன் சேர்ந்து 169 தொகுதிகளைக் கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சி அமைக்கும் தகுதியைப் பெற்றுள்ளது.

நேற்று கூடிய ஜனதாதள் கூட்டத்தில் லாலு பிரசாத் யாதேவை முதல்வராக நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பட்னாவில் இன்று ஜனதாதள்ளும் ஏனைய கட்சிகளும் கூடவிருக்கின்றன. (இ-3)

# யாழ். மாணவரின் வெட்டுப்புள்ளி பற்றி ஆராய்வதற்கு ஆணைக்குழு

கொழும்பு, ஏப். 3

பல்கலைக் கழக அனுமதி தொடர்பான வெட்டுப்புள்ளியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அநியாயம் குறித்து ஆராய உடனடியாக ஆணைக்குழு ஒன்றை நியமிக்க ஜனாதிபதி சந்திரிகா இணக்கம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட யாழ். மாணவர்களின் குழுவுடன் நடத்திய பேச்சின் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறியதாக கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது

இவ்வருட அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக விசேட ஏற்பாடு ஒன்று செய்து தருவதாகவும் ஜனாதிபதி உறுதி அளித்துள்ளார்.

நியமிக்கப்படும் ஆணைக்குழு தெரிவிக்கும் பரிந்துரையின் அடிப்படையில் பாதிப்புக்களுக்கு நிவாரணம் அளிக்கப்படும் என்றும் —

யுத்தத்தால் சீரழிக்கப்பட்டுள்ள யாழ். பிரதேச மாணவர்களுக்கு பாதிப்பில்லாத முறை ஒன்று முன்வைக்கப்படும் என்றும் — ஜனாதிபதி தெரிவித்தார். (இ-3)

# 12 ஆயிரம் ஈழ அகதிகளை சுவிஸ் திருப்பி அனுப்பும்

## மட்டக்களப்பில் சுவிஸ் அதிகாரிகள் தகவல்

கொழும்பு, ஏப். 3

சுவிஸில் உள்ள 24 ஆயிரம் ஈழத்தமிழ் அகதிகளில 12 ஆயிரம் பேரை திருப்பிஅனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மட்டக்களப்புக்கு விஜயம் செய்த சுவிஸ் அரசின் அகதிகள் பணியகத்தின் அதிகாரிகள் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசேப் பரராஜசிங்கத்திடம் இதனைத் தெரிவித்தனர்.

விடுதலைப் புலிகளுக்கும், அரச படைகளுக்கும் மோதல் தவிர்ப்பு ஏற்பட்ட பின்னர் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான சூழ் நிலை ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக மேற்படி அமைப்பைச் சேர்ந்த ஸ்ரீபன் பார்க், கிறிஸ்தோப் எரின் ஆகியோர் இலங்கை வந்திருந்தனர்.

இவர்களுடன் சுவிஸ் தூதரகத்தை சேர்ந்த மைகதல் வோவ் என்பவரும் மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

சுவிஸில் 24 ஆயிரம் ஈழ அகதிகள் இப்போது தஞ்சம் அடைந்துள்ளனர். இவர்களில் 6 ஆயிரம் பேருக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் வந்த மேலும் 6 ஆயிரம் பேருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அகதி மர்மச் சாவு

இராமேஸ்வரத்தில் உள்ள மண்டபம் அகதி முகாமில் இலங்கைத் தமிழ் அகதி ஒருவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

இறந்தவர் செல்வம் என அழைக்கப்படும் கபிலர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. [இ-3]

# நாட்டின் சகல இன மக்களின் நலன்களையும் கவனத்தில் எடுத்தே இனப்பிரச்சினைத் தீர்வு

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆண்டு விழாவில் சந்திரிகா

கொழும்பு, ஏப் 3

"இனப்பிரச்சினைக்கு காணப்படும் அரசியல் தீர்வு சகல இன மக்களின் நலன்களையும் கவனத்தில் எடுத்த தொன்றாகவே அமையும்"

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 13 ஆவது ஆண்டுவிழா நேற்று கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெற்றது.

அதில் பிரதம அதிதியாக கலந்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"சமாதானம் நிலைநாட்டப்படும். பொருளாதாரம் சுபீட்சப்படும்" என்று மக்களுக்கு அளித்த உறுதிமொழியை அரசு மறந்து விடவில்லை.

பல்வேறு இன மத பிரிவினரும் அச்சமின்றி ஒற்றுமையாக வாழக் கூடிய ஓர் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது.

இந்த முயற்சியின் போது எதிர்நோக்கப்படும் தடங்கல்களை முறியடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு உள்ளது.

விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சிகள் தொடர்ந்து மேற் கொள்ளப்படுகின்றன.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அரசியல் நடவடிக்கைகள் பற்றி விரைவில் பேசப்படும்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஓர் வெற்றியாகும் கடந்த மூன்று மாதங்களில் பாரிய தாக்குதல் ஒன்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதா குற்றவாளியாக தீர்க்கப்பட்டால் சிறைத் தண்டனை

புதுடில்லி, ஏப். 3

செல்வி ஜெயலலிதா குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டால் அவருக்கு ஆறு வருடங்கள் தொடக்கம் இருபத்தியொரு வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படுவதோடு அவர் ஊழல் மூலம் பெற்றுக்கொண்ட சொத்துக்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்படும்.

இவ்வாறு ஜனதாக் கட்சித் தலைவர் டாக்டர் சுப்பிரமணியசுவாமி தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதா மீது 38 ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

டாக்டர் சுவாமி பேர ஊழல்'எஸ்ரேட்' ஆக்கிரமிப்பு ஊழல் ஆகிய இரு முறைகேடுகள் குறித்த வழக்கை முதலில் தாக்கல் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெயலலிதா மீது வழக்குத் தொடர டாக்டர் சுப்பிரமணிய சுவாமிக்கு ஆளுநர் சென்னா ரெட்டி அனுமதி வழங்கி இருப்பது தெரிந்ததே. (இ-7)

## தமிழக அரசியல்நிலை பற்றி குமரி அனந்தன் அறிக்கை

### மத்திய அரசுக்கு அனுப்புவார்

சென்னை, ஏப். 3

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது ஊழல் குற்றச்சாட்டு வழக்கு தொடர ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டி அனுமதி வழங்கியிருப்பதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் எழுந்துள்ள அரசியல் நிலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் குழுக்களையும் அழைத்துச் செல்வதா?

### செய்தியாளரிடம் சந்திரிகா கேள்வி

கொழும்பு, ஏப். 3

விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ குழுக்களின் பிரதிநிதிகளை விமானத்தில ஏற்றி யாழ்ப்பாணத்துக்குக் கூட்டிச்சென்று புலிகளுடன் பேசவைக்க வேண்டும் என நீங்கள் கூறுகிறீர்களா?

கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர்களைப் பார்த்து மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

ஜனநாயகத்தை ஏற்றுக்கொண்டு ஜனநாயக நீரோட்டத்தில் பிரவேசித்துள்ள ஏனைய தமிழ் குழுக்களுடன் பேசாமல் பேச்சுவார்த்தை நடத்தலாமா என்ற செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதில் அளிக்கையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சாவகச்சேரி, நகரசபை எல்லைக்குள் நான்கு பரப்பு காணியுடன் சகல வசதிகளும் அடங்கிய வீடு விற்பனைக்குண்டு. பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். க. சுப்பிரமணியம், மருதடி வீதி, சாவகச்சேரி.
(35987)

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வேலும் மயிலும் முறிவு தறிவு வைத்தியசாலை, மானிப்பாய் மேற்கு, கட்டுடை.
(35989)

புதிய கீபோட் ரெமிங்டன் தமிழ் தட்டச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: மருதம், 66, மணிக்கூட்டுவீதி, (வைத்தியசாலை முன்பாக) யாழ்ப்பாணம். [36005]

நல்ல நிலையில் உள்ள Ford Prefect கார் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி; செ. அந்தோனிப்பிள்ளை, உயரப்புலம், ஆனைக்கோட்டை.
8467)

### கோழிக் குஞ்சு விற்பனை

ஒரு வாரம் வளர்ச்சி அடைந்த கோல்டன்கொமற் சிவப்பு பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. சி. குலசிங்கம், இல 9 றக்கா வீதி, யாழ்ப்பாணம். (Bar முன்பாக) [36013]

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரி முன் ஒழுங்கைக்குள் பரப்பு 2½ அளவுள்ள காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா. கணேசு, கிராம உத்தியோகத்தர், கனகசபை வீதி, மானிப்பாய்.
[8460]

யாழ்ப்பாணம் செபற்றிக்ஸ் வீதியில் சகல வசதிகளுமான இரண்டு வீடுகளுடன் இரண்டு பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு பகுதியாகவும் கொடுக்கப்படும். தொடர்பு: எஸ் ரி. ஞானம், இல 21, சென்பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.
[36012]

### வீனஸ் அன்ரனா

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு T V. அன்ரனா பொருத்துதல், பழுது பார்த்தல், T.V. டெக், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக்கொள்வதற்கு வீனஸ் டிக்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி.
[சி-649]

### வாழ்த்து மடல்கள்

புத்தாண்டு வாழ்த்து மடல்கள், இரகுநாதையர் பஞ்சாங்கம் மொத்தமாகவும் சில்லறையாகவும். 94ஆம் ஆண்டு உயர்கல்வி வெளியீடு, விலங்கியல் A/L 'பாஸ் பேப்பர்' வர்த்தகம் நிதியிலும் வெளிவந்து விட்டது. மக்மிலன், ஸ்ரீகாந் யாழ். நல்லூர். [சி-644]

### வகுப்புகள்

கேக் ஐசிங், மாச்சினி அலங்காரம், Fondant Icing, ஒப்பனைக்கலையும், தலையலங்காரம், பூ அலங்காரங்கள், மலர்ச்செண்டுகள் தயாரித்தல் [Silk Ribbon, Stocking Net, Bouquets] புதிய வகுப்புக்கள் 16-4-95 முதல் ஆரம்பமாகிறது. தொடர்பு: Yogi Home Science Academy நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் (முத்திரைச் சந்தையடி), நல்லூர்.
(சி 634)

### கனடா நாடகப் பரிசு

கனடா, ரொறன்ரோ ஆகிய வானொலி நிலையத்தின் தமிழ்ப் பிரிவு நடத்திய நாடகப் போட்டியின் முதலாம் பரிசு பெற்ற அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாவல் 'அக்கரைச் சீமையில்' பூபாலசிங்கம், புத்தகசாலை.
[35611]

### பண்ணெய் விநியோகம்

தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் 4-4-1995 அன்று காலை 10-00மணி—2-00 மணி வரை தலா 4 லீற்றர் வழங்கப்படும். தொடர்பு: மாணவர் அவை.
[36011]

## அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் 14ஆவது தொகுதி மாணவர்களுக்கான (1991/92 தொகுதி) விரிவுரைகள் 17-04-1995இல் ஆரம்பமாகும்.

தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

— பதிவாளர்.

(சி-787)

## தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்

## முக்கிய அறிவித்தல்

கீழ்க்காணும் உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் அனைத்து உற்பத்தியாளர்களுக்கான அவசர கலந்துரையாடல்கள் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன. அவ்வுற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்கள் இக் கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1. மென்பானம், பழரசம்
   03-04-95 காலை 10-00 மணி
2. இனிப்பு/ரொபி/சொக்லேற்/சற்கண்டு/கச்சான் அல்வா/ஏனைய இனிப்பு வகைகள்
   03-04-95 மாலை 3-00 மணி
3. குளிர்களி (ஐஸ்கிறீம்), ஜாம்
   04-04-95 காலை 10-00 மணி
4. அப்பளம்
   06-04-95 காலை 10-00 மணி

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனம்.

230, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

[சி-881]

## பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு எம்மால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. தகைமையுடையோர் 13-04-1995க்கு முன் கிடைக்கக்கூடியதாக சான்றிதழ்களின் பிரதியுடன் தங்கள் விண்ணப்பங்களைப்

பொது முகாமையாளர், உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
இல. 10, செம்பியன் லேன், கொக்குவில்
என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1. திட்டமிடல் அலுவலர்
   ஒரு நிறுவனத்தில் திட்டமிடல் அலுவலராக 5 வருட அனுபவம்
2. பொறியியலாளர் (இயந்திரவியல் / மின்சாரவியல் / குடிசார்)
   சம்பந்தப்பட்ட பொறியியல் பட்டதாரி மூன்று வருட அனுபவத்துடன் அல்லது தொழில் நுட்பவியல் சான்றிதழுடன் 10 வருட அனுபவம் அல்லது முகாரியாகப் 15 வருட அனுபவம்.
3. சிரேஷ்ட / கனிஷ்ட தொழில் நுட்பம் அலுவலர் (நீர்ப்பாசனம் / மின்சாரவியல் / குடிசார்)
   தொழில் நுட்பவியல் சான்றிதழுடன் முறையே 10/5 வருட அனுபவம்
4. படவரைஞர் (சிரேஷ்ட / கனிஷ்ட)
   படவரைஞர் சான்றிதழுடன் முறையே 10/5 வருட அனுபவம்
5. நிர்வாக உத்தியோகத்தர்
   பட்டதாரி 3 வருட அனுபவம் / அரச தனியார் சேவையில் 15 வருட அனுபவம்.
6. எழுதுவினைஞர்
   க பொ.த. (சா/த) சித்தியடைந்த சான்றிதழுடன் 5 வருட அனுபவம்
7. தட்டெழுத்தாளர்
   தட்டெழுத்துச் சான்றிதழுடன் 3 வருட அனுபவம்
8. சிற்றூழியர்
   க. பொ. த. (சா/த) சித்தி

குறிப்பு:
மேலதிக விவரங்களுக்கு மேற்படி விலாசத்துக்குத் தொடர்பு கொள்ளவும்.

[சி 871]

முதலாவது
## பிறந்த நாள் வாழ்த்து
(03-04-1995)



### ★ செல்வன் புவிராஜ் ★

கோண்டாவில் மேற்குக் கோண்டாவிலைச் சேர்ந்த கமலேந்திரன் சாந்திமதி தம்பதிகளின் செல்வப் புதல்வன் புவிராஜ் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று [03-04-1995] கோண்டாவிலில் உள்ள தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார். புவிராஜ்யை அன்பு அப்பா, அம்மா, தனுஜா அக்கா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பா, அன்ரிமார், மச்சான், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார், தங்கை பானுஜா, உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லாம் வல்ல இறை அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(35970)

## கதர் சால்வை

காந்தி கதர் உட்பட எல்லா விதமான
★ வேஷ்டிகள், சால்வைகள் ★
விற்பனையாகின்றன.

கமலேஸ்வரி களஞ்சியம்
271/18, காங்கேசன்துறைசாலை,
யாழ்ப்பாணம்.

[36015]

## பட்டப் படிப்புக்கள்

ஆரம்பம்: 05-04-95

G. A. Q. – 1995 (யாழ்ப்பாணம்)
G. A Q. – 1996 (யாழ்.பேராதனை)
First In Com.– 1995/96 (யாழ்ப்பாணம்)

பதிவாளர்
பட்டப்படிப்பு பிரிவு
கலை வர்த்தகக் கல்லூரி
C. C. A. யாழ்ப்பாணம்.

எமது விரிவுரையாளர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ |
| தமிழ் | — | திரு கணேஸ் |
| இ. நாகரிகம் | — | திரு ஜோதீஸ்வரன் |

ஏனைய எல்லாபாடங்களுக்கான விரிவுரைகளும்நடைபெறும்.

குறிப்பு: முழுபாடத்திட்டமும், பூர்த்திசெய்யப்பட்டு மீட்டல் வகுப்பும் நடைபெறும்.

[சி/632]

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய அதிபர்
அருட்செல்வி எம். ஜெறோம் A.C
அவர்களின் அன்புச் சகோதரர்

அமரர்
ஜோசவ் பொன்னையா சிங்கராயர்

அவர்களின்
மறைவையொட்டி எமது நெஞ்சம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயறுரும் சகோதரிக்கும் (அதிபர்) அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபை,
பழைய மாணவர் மன்றம்,
யாழ் புனித ஜோன் பொஸ்கோ
வித்தியாலயம்.

[36016]

## வாகன வசதி இல்லாது ஏற்புவலி நோயாளி மரணம்

### மிருசுவிலில் சம்பவம்

தென்மராட்சி, ஏப். 3 ஏற்புவலி ஏற்பட்ட பெண் ஒருவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல வாகன வசதி கிடைக்காததால் அவர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் கடந்த வாரம் மிருசுவில் பகுதியில் இடம் பெற்றது.

கடந்த மாதம் அந்தப் பெண்ணுக்கு காலில் தகரம் வெட்டியதாகத் தெரிவிக்கப் பட்டது. அவர் அதற்கு ஏற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முத்தமிழ் பட்டி மன்றம்

இயல், இசை, நடிப்பு
[26 ஆவது தடவை]

எவர் பாடலில் தத்துவ அர்த்தங்கள் மேலோங்கி நிற்பது

| கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | கவிஞர் கவியரசு கண்ணதாசன் |
|---|---|
| கனக. நாகேஸ்வரன் B.A. | எம் எஸ் தயாளன் B.A. |
| செ. சத்தியமூர்த்தி B.Sc. | எஸ் கணேசலிங்கம் B.A. |
| பொன். மதிமுகராஜா J.P. | இரா. செல்வவடிவேல் ஆசிரியர் |
| செ. திருநாவுக்கரசு M.A. | செ. குணபாலசிங்கம் B.A. |

இவர்களுடன்
சங்கர் வாமன், க. கனகரட்ணம்

பட்டி மன்ற அமைப்பு:
பொன். மதிமுகராஜா J.P.
எம் ஜி ஆர். இல்லம்,
தாவடி. கொக்குவில்.

நீர்வை கந்தன்

## ★ 7 ஆம் திருவிழா ★

வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு
03-04-1995 இன்று
காலை அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி அவற்றைத் தொடர்ந்து இரவு நிகழ்ச்சிகள்

சிவநெறித் தொண்டன்
செ. சத்தியமூர்த்தி ஆசிரியர் B.Sc.
அவர்களின் பேச்சு

விடயம்: கந்தன் கனியமுதம்

சிறுப்பிட்டி சத்தியன் குழுவினரின்
★ வில்லிசை ★

யாழ். ஈழ நல்லூர்
அருணா வழங்கும் ★ இன்னிசை கானம் ★

7 ஆம் திருவிழா உபயகாரர்

(சி-885)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் தலைவர்
அருட்திரு J. P. E. செல்வராஜா
அவர்களின அன்புச் சகோதரர்

அமரர்
ஜோசவ் பொன்னையா சிங்கராயர்

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் சகோதரருக்கும், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகசபை உறுப்பினர்கள்,
பதிவாளர், ஆசிரியர்கள்,
அலுவலர்கள், மாணவர்கள்.
பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனம்,
59 பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

[சி-884]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 05 — 02 — 1938



மறைவு: 04 — 03 — 1995

### அமரர் கந்தர் இராசரத்தினம்

மாமா என்று அழைக்க
இனி யாருண்டு மாமா
எமை விட்டு பிரிவதற்கா
கொழும்புக்குச் சென்றீர்
வாராத நோய் வந்ததா தம்பி
நாம் இருந்தும் மனைவி மக்கள் இருந்தும்
தனி மரமாய் உயிரிழந்தீர்
என் அருமை தம்பியே ......

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;
அக்கா, அத்தான், சின்னண்ணை,
மருமக்கள்.

தகவல்:
திருமதி சி. நாகரத்தினம்
பாடசாலை ஒழுங்கை,
வண். வட மேற்கு,
ஆனைக்கோட்டை.

(36017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 காலவர் வீதி
யாழ்ப்பாணம்

## வெளியார் அறிக்கைகள்

இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையை அகற்றி, இனப்பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான அரசியல் தீர்வினைக் காண்பதற்காக பற்றுறுதியுடன் பேச்சுக்களைத்தொடர வேண்டும்.

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் கூடிய அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் அமைப்பு மேற்கண்டவாறு வலியுறுத்தி உள்ளது.

இலங்கை நிலைவரங்களை நீண்ட நேரம் ஆராய்ந்த பின்னர் வெளியிட்ட அறிக்கையிலேயே "என். ஜி. ஓ. போரம் ஒவ் ஸ்ரீலங்கா" என்ற அந்த அமைப்பு மேற்கண்டவாறு கூறியுள்ளது.

இது போலவே —

"இலங்கையில் சமாதானத்துக்கான நண்பர்கள்" என்ற அமைப்பும், அரசு – புலிகள் பேச்சுவார்த்தை தொடர வேண்டும் என்ற கோரிக்கையை இருதரப்பாரிடமும் முன் வைத்துள்ளது.

ஹொங்கொங்கில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் சமாதானத்துக்கான நண்பர்கள் அமைப்பு, அரசியல் ரீதியில் அல்லாத மனிதாபிமான அடிப்படையிலான விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளில் அரசு உரிய கவனம் செலுத்த வேண்டும் என்றும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிய அறிக்கையில் எடுத்துரைத்துள்ளது.

வடக்குக்கும் தெற்குக்கும் இடையில் பாதுகாப்பான பாதை ஒன்றை அரசு திறக்க வேண்டும் என்றும், இது விடயத்தில் மக்களின் வழமையான வாழ்க்கை நிலையை ஏற்படுத்துவதற்கே முதலிடம் கொடுக்கப்படவேண்டும் என்றும் அந்த அறிக்கை மூலம் சந்திரிகாவுக்கு இடித்துரைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய அறிக்கைகளுக்கு காரணம் இல்லாமல் இல்லை.

இலங்கையில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் கண்டு, சமாதானத்தைக் உருவாக்கும் நோக்குடன் தொடங்கப்பட்ட பேச்சுக்கள் முடங்கிப்போய் விட்டன,

விடுதலைப் புலிகள் முன் வைத்த மக்களின் அன்றாடப் பிரச்சினை தொடர்புடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு சந்திரிகா பின்னடிக்கிறார். தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கையை வழமை நிலைக்குக் கொண்டுவருவதை விட, இராணுவ நலன்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பன வெளியே நின்ற பார்ப்போருக்கு நன்றாகப் புலனாகின்றது!

வடக்கு- கிழக்குப் பிரச்சினை இனப்பிரச்சினைதான் என்றும். அதற்கு அரசியல் தீர்வையே காணப்போவதாகவும் முன்னர் கூறிய சந்திரிகா, இப்போது பதவிக்கு வந்த பின்னர் அரசியல் தீர்வு சாத்தியப்படாவிடில், இராணுவத் தீர்வு என்று தமக்குள் முடிவுக்கு வந்திருக்க வேண்டும்.

இல்லையேல் கஷ்டமுறும் தமிழ் மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது ஓர் அரசாங்கத்துக்கு ஒன்றும் கஷ்டமல்ல. அதனை உளப்பூர்வமாக நினைத்துச் செயற்பட்டால் அரசியல் தீர்வு குறித்துப் பேசுவதும் தாமதப்படாது.

அரசாங்கம் எழுந்தமானத்தில் அன்றித் திட்டமிட்ட முறையில் செயற்பட்டிருக்குமானால், கடந்த இரண்டரை மாதங்களும் அவமாகியிருக்கமாட்டா. இதனை சந்திரிகா இப்போதும் உணர்ந்தவராக இல்லை. அவரது போக்கு கடினமானதாகவும், அதிகாரத்தனம் மிக்கதாகவும் காணப்படுகிறது.

பேச்சுவார்த்தை தொடர வேண்டுமெனில் சந்திரிகாவின் போக்கில், நடத்தையில் மாற்றம் வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு வெளியார் அமைப்புகள் சந்திரிகாவுக்குப் புத்திமதி கூற வேண்டும். புத்திமதி ஏறாவிடில் அழுத்தம் கொடுக்கத் தயங்கக் கூடாது.

மேற்கண்ட அமைப்புகள் போன்ற வெளியார் அமைப்புகளுக்கு இலங்கையில் சமாதானம் உண்டாக வேண்டும் என்பதில் உண்மையான அக்கறை இருந்தால், தம்மாலியன்ற நெருக்குதலை அரசுப் பக்கத்துக்கே கொடுக்க வேண்டும்.

# யுத்தம் மூலம் தீர்வுகாண அரசு ஒருபோதும் முயலாது

### அமைச்சர் தர்மசிறி தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 3

நாட்டைப் பிளவு படுத்தவோ அல்லது வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காணவோ எமது அரசு ஒருபோதும் முனையாது. சாத்வீகமான முறையில் பிரச்சினைகளைத் தீர்க்க சகல நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்வோம். சமாதானப் பேச்சுவார்த்தை வெற்றிபெறும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

—இவ்வாறு அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

தெரணியகலை பனாவல என்னும் இடத்தில் புதிய பாதை ஒன்றை அமைச்சர் திறந்து வைத்தார்.

அந்த வைபவத்தில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் இந்திய, பங்களாதேஷ் விஜயம் பொருளாதார உதவி பெறவும், வர்த்தகத்தைப் பெருக்கவும் மேற்கொள்ளப்பட்ட விஜயம் ஆகும்.

தேர்தல் வாக்குறுதிகளை தள்ளிப்போட்டு நொண்டிச் சாட்டுக்கூறி மக்களை ஏமாற்ற அரசாங்கம் முற்படாது. கடந்த நான்கு மாதங்களில் பல வாக்குறுதிகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

ஏப்ரல் மாதத்தில் இருந்து சகல தேர்தல் தொகுதிகளையும் பாகுபாடு பார்க்காமல் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இன, மத, மொழி, அரசியல் அடிப்படையில் எமது அரசு செயற்படாது — என்றார். (ஐ)

# மட்டக்களப்பில் மீளக்குடியமர இடம்பெயர்ந்த மக்கள் மறுப்பு!

மட்டக்களப்பு, ஏப். 3

மட்டக்களப்பு கோயில் குளம், ஒல்லிக்குளம் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர அப்பகுதி மக்கள் மறுப்புத் தெரிவித்து உள்ளனர்.

இவர்களை இப்பகுதிகளில் மீளக்குடியமர்த்த அரச அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டனர்.

ஆனால் இப்பகுதிகளில் நிரந்தர சமாதானமும், அமைதியும் தோற்றுவிக்கப்பட்டால் மாத்திரமே தாம் அப்பகுதிகளில் மீண்டும் குடியேற முடியும் என்று அவர்கள் தெரிவித்து விட்டனர்.

இதேவேளை — இப்பகுதிகளில் இருந்து வெளியேறிய மக்கள் தற்போது வாழைச்சேனைப் பகுதியில் உள்ள பேத்தாழை அகதிகள் முகாமில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கு கடந்த பெப்ரவரி மாத ஆரம்பத்தில் வழங்கப்பட்ட நிவாரண உணவுப் பொருள்களுக்குப் பின் இன்று வரை வேறு எந்த நிவாரணமும் வழங்கப்படவில்லை.

இதனால் அங்கு வாழும் மக்கள் உணவின்றி கஷ்டப்படுகின்றனர்; அத்துடன் அவர்களின் குழந்தைகளின் நிலை மிகவும் பரிதாபமாக உள்ளது. (ஐ-5)

# துறைமுக விஸ்தரிப்பு என்ற பெயரில் சிங்களத் தொழிலாளர் குடியேற்றம்

### திருமலையில் அரசு மேற்கொள்கிறது

திருகோணமலை, ஏப். 3

திருகோணமலை துறைமுகத்தை விஸ்தரிப்பது என்ற போர்வையில் அங்கு சிங்களத் தொழிலாளர்கள் புதிதாக வேலையில் அமர்த்தப்படுகின்றனர்.

ஆனால் முன்பே துறைமுக வேலைகளில் ஈடுபட்டிருந்த தமிழர் எவரும் இந்த வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

கொழும்புத் துறைமுகத்தில் வேலை செய்த, அனுபவம் பெற்ற தொழிலாளர்களே, திருகோணமலைத் துறைமுக விஸ்தரிப்பு வேலைகளில் அமர்த்தப்படுவார்கள் என்று கூறி அரசு சிங்களவர்களையே திருமலைக்கு அனுப்பி வருகிறது.

துறைமுக விஸ்தரிப்பு வேலைகளில் ஈடுபடுவோருக்கு குடியிருப்புகளை அமைத்துக் கொடுத்தல் என்பதை காரணங்காட்டி — அங்கு ஒரு சிங்கள குடியேற்றக் கிராமத்தை அமைக்கும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-5)

# வடக்கில் சமாதான முயற்சிகளுக்கு தெற்கு இளைஞர்கள் உதவ வேண்டும்

### அமைச்சர் மங்கள சமரவீர கூறுகிறார்

கொழும்பு, ஏப் 3

"வடக்கில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு தென்பகுதி இளைஞர், யுவதிகள் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்".

— தபால், தந்தி தொலைத் தொடர்புகள் அமைச்சர் மங்கள சமரவீர இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் மாத்தறை மாவட்டத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் உரையாற்றினார்.

அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கில் உள்ள மக்கள் சமாதானத்தையேஎதிர்பார்க்கிறார்கள்: அவர்களது ஒரே அபிலாஷையும் அது தான்.

நாட்டில் உள்ள இளைஞர் யுவதிகளின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறான தீர்வு காணப்படாமையினாலேயே இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர் — என்றார். (ஐ-5)

### கிராம உத்தியோகத்தர்கள்

## பயிர்ச்செய்கை அலுவலர் பதவிக்கு மீண்டும் மாற்றம்

கொழும்பு, ஏப். 3

1989 ஆம் ஆண்டு கிராம உத்தியோகத்தர் சேவைக்கு மாற்றப்பட்ட பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள், விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோரை நேற்று முதலாம் திகதி தொடக்கம் தமது முன்னைய பதவிகளுக்கே மாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான பணிப்புரையை பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் பெருந்தோட்ட கைத்தொழில் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர்.எஸ். ஜெயரத்தின விடுத்துள்ளார்.

மேற்படி கிராம உத்தியோகத்தர்கள் முன்னர் கமநல சேவைகள் திணைக்களம், விவசாயத் திணைக்களம் என்பனவற்றில் கடமையாற்றி வந்தனர்.

இவர்கள் மீண்டும் தமது முன்னைய பதவிகளுக்கு நேற்று முதல் திரும்புமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-4)

## பண்ணிசை போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 3

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில், திருநெறிய தமிழ் மறைக் கழகம் ஆண்டுதோறும் நடத்தும் பண்ணிசைப் போட்டிகள், இவ்வருடமும் எதிர் வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில், இணுவில் இந்துக் கல்லூரியில், காலை 8.30 மணி முதல் நடை பெறவுள்ளன.

நான்கு பிரிவுகளாக நடைபெறவுள்ள இப் போட்டியில். பிரிவுரீதியாக முதல் இடத்தைப்பெறும் ஒவ்வொருவருக்கும் தங்கப்பதக்கம் பரிசாக அளிக்கப்படும். [ஐ-5]

### பதிவுத் தபால் கட்டணம் அதிகரிப்பால்

# அடையாள அட்டையை உரியவருக்கு அனுப்பிவைக்க முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஏப். 3

கொழும்பில் இருந்து யாழ். செயலக ஆட்பதிவுக் கிளைக்கு எடுத்துவரப்பட்டுள்ள அடையாள அட்டைகளில் பெரும்பாலானவற்றை உரியவர்களுக்கு அனுப்பிவைக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொலைந்த அடையாள அட்டைகளை மீளப் பெறுவதற்காகவும், அவசர தேவைக்காகவும் விண்ணப்பித்தவர்களது அடையாள அட்டைகளையே உரியவர்களுக்கு அனுப்பிவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி விண்ணப்பதாரர்கள் அடையாள அட்டைக்கான தமது விண்ணப்பத்துடன் சுயமுகவரியிடப்பட்ட — பதிவுத்தபால் முத்திரைகள் ஒட்டப்பட்ட— தபால் உறையையும் சேர்த்து அனுப்புவது வழக்கமாகும்.

எட்டு ரூபா 50 சதம் பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறைகளையே மேற்படி விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் அனுப்பியிருந்தனர்.

தபால் கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக தற்போது பதிவுத் தபாலுக்கான முத்திரையின் பெறுமதி 10 ரூபா 50 சதமாகும்.

இதனால் —

8 ரூபா 50 சதம் பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையில் வந்துள்ள அடையாள அட்டைகளை உரியவர்களுக்கு அனுப்பி வைக்க முடியாதிருப்பதாக ஆட்பதிவுக்கிளை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே அத்தகைய அடையாள அட்டைகளை பிரதேச [illegible] சேவையாளர்களுக்கு அனுப்பி [illegible] பட்டுள்ளது. (ஐ)

### புலிகளின் குரல் வானொலியில்

03 — 04 — 1995

திங்கள் இரவு

★ 8-02 — தளிர்கள் சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20 — தாயகப் பாடல்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — தரிசனம் என்பன இடம் பெறும்.

04 — 04 — 1995

செவ்வாய் காலை

★ 7-02 —மாவீரவணக்கம்
★ 7-15 — இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப்பாடல்கள்

### தமிழீழ வானொலி

ஒலிபரப்பு

திங்கள் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — ஆழியமுதம்
★ 5-30 — மாணவர் பக்கம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — நேயர் நெஞ்சம்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6-20 — என்தெரிவு

## நான்காவது சாகித்திய விழா

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் நான்காவது சாகித்திய விழா எதிர்வரும் மே மாதம் 26ஆம் 27ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் சுவாமி விவேகானந்தர் இசை நடனக் கல்லூரி அரங்கிலே நடைபெற உள்ளது.

இது தொடர்பான முடிவு கடந்த 28ஆம் திகதி மட்டக்களப்பு செயலகத்தில் அரச அதிபர் ஏ. கே. பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் எடுக்கப்பட்டது. (ஐ-4)

## தாச்சி போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தினால் நடத்தப்பட இருக்கும் தாச்சி சுற்றுப் போட்டியில் பங்குபற்றவிருக்கும் கழகங்கள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் தாச்சி விளையாட்டுச் சங்கம், மாவட்டச் செயலகம், கோண்டாவில் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட கழகங்கள் மட்டுமே போட்டியில் பங்குபற்ற முடியும். எனவே இதுவரை பதிவு செய்யாத கழகங்கள் தாச்சி விளையாட்டுச் சங்கத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## மலையகத்தில் கடும் வரட்சி ஒரு பீப்பாய் குடிநீர் ரூ. 30

கொழும்பு, ஏப் 3

மலையகப் பகுதிகளில் கடும் வரட்சி நிலவுவதால் சில இடங்களில் குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது இதனால் மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

குறிப்பாக குண்டசாலை பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசங்களிலே குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

குண்டசாலை, கெங்கல்ல, திகண போன்ற இடங்களில் குடிநீர் பெறுவதில் மக்கள் பெரும் சிரமங்களையும், துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

திகண பகுதி கடை வீதிகளில் சிலர் பீப்பாய்களில் குடிநீரை சேகரித்து ஒரு பீப்பாய் நீரை 30 ரூபா முதல் 50 ரூபா வரை விற்பனை செய்கின்றனர். [ஐ]

# அமைச்சர்களின் போலி கடித தலைப்புகள் மீட்பு!

கொழும்பு, ஏப். 3

மாளிகாவத்தை பகுதியில் உள்ள தொடர் மாடி வீடு ஒன்றை முற்றுகையிட்ட இரகசியப் பொலீஸார் அங்கிருந்து பெருந்தொகையான அடையாள அட்டைகள், பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள், அமைச்சர்களின் கடிதத் தலைப்புகள், றப்பர் ஸ்டாம் சீல்கள் என்பவற்றைக் கைப்பற்றினர்.

இரகசியப் பொலீஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றை அடுத்து இந்த திடீர் முற்றுகை நடத்தப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். [ஐ]

## இலங்கை விமான படைக்கு 13 பெண் அதிகாரிகள்!

### பயிற்சி முடித்து வெளியேற்றம்

கொழும்பு, ஏப்ரல். 3

இலங்கை விமானப் படைக்கு புதிதாகச் சேர்க்கப்பட்ட 13 பெண் "கடேட்" அதிகாரிகளும் 318 வீராங்கனைகளும் எதிர்வரும் 7 ஆம் திகதி தங்கள் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேற உள்ளனர்.

தியத்தலாவை விமானப் படை முகாமில் இவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சி நிறைவு வைபவத்தில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேணல்அனுருத்த ரத்வத்தை பிரதம அதிதியாககலந்து கொள்வார். (ஐ)

### இலங்கை வங்கியின்

## மகளிர் பொற்கணக்கில் யாழ். வாசிக்கு அதிர்ஷ்டம்

யாழ்ப்பாணம் ஏப். 3

இலங்கை வங்கியின் மகளிர் பொற்கணக்கு திட்டத்தில் இணைந்துள்ள யாழ் வாசி ஒருவருக்கு கடந்த மார்ச் 8 ஆம் திகதி நடைபெற்ற பரிசுக் குலுக்கலில் முதல் தடவையாக அகில இலங்கை ரீதியில் மூன்றாம் இடம் கிடைத்துள்ளது,

இலங்கை வங்கியின் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை இரண்டில் மகளிர் பொற்கணக்கை ஆரம்பித்த ஒருவருக்கே இந்த அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது.

மூன்றாம் இடத்தைப் பெற்ற அவருக்கு வடஇந்தியா சென்று வருவதற்கான விமானச் சீட்டுடன் 10 ஆயிரம் ரூபா ரொக்கமும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

கடந்த மார்ச் 8 ஆம் திகதி நடைபெற்ற மகளிர் தினத்தில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட இப் பொற்கணக்கில் ஆறுதல் பரிசில்களாக தலா ஒரு தங்கப் பவுண் நாணயங்கள் பலருக்கு வழங்கப்பட்டன.

இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறை கிளையில் 2 பேரும், பருத்தித்துறை கிளையில் 2 பேரும், மானிப்பாய், நெல்லியடி, சாவகச்சேரி, சுன்னாகம் போன்ற கிளைகளில் தலா ஒருவரும், யாழ். ஆஸ்பத்திரிவீதி மேல் தரக் கிளையில் 4 பேரும் தங்க நாணயங்களைப் பெற்றனர்.

யாழ். மாவட்டத்தில் இலங்கை வங்கியின் யாழ். ஆஸ்பத்திரி வீதி மேல் தரக் கிளை தவிர்ந்த ஏனைய கிளைகளில் மட்டும் 3 ஆயிரத்து 700 பேர் மகளிர் பொற்கணக்கு வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

### தமது குறைபாடுகளை நீக்கக் கோரி

# தமிழ் பேசும் கிராம சேவகர் சங்கம் அரச அதிபருக்கு மகஜர் சமர்ப்பிப்பு

வலிகாமம்தெற்கு. ஏப். 3

தமிழ் பேசும் கிராம சேவையாளர் சங்கத்தினர் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். செயலகத்தில், யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு க. பொன்னம்பலத்தை சந்தித்து தமது குறைபாடுகள் பற்றி எடுத்துரைத்தனர்.

★ கிராம சேவையாளர்களுக்கு உத்தியோக பூர்வ தளபாடங்கள் தரப்படுதல் வேண்டும்.

★ போதியளவு காகிதாதிகள் வழங்க வேண்டும்.

★ சம்பள உயர்வுகளும் பதவி உயர்வுகளும் காலவேளைகளை அனுசரித்து அவ்வப்போது வழங்கப்படல் வேண்டும்.

★ கிராம சேவையாளர் பிரிவு எல்லைகளை வகுப்பதில்— பங்கீடு செய்வதில்— உள்ள குறைபாடுகள் நீக்கப்படவேண்டும்.

ஆகிய கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மேற்படி சங்கத்தினர் அரச அதிபரிடம் கையளித்தனர்.

சங்கத்தின் உபதலைவர் திரு. தில்லையம்பலம், செயலாளர் திரு. கதிர்காமநாதன், பொருளாளர் திரு. திருநாவுக்கரசு, மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் அடங்கிய குழுவினர் அரச அதிபருடனான சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ-152)

## பொலீஸாரை தாக்கி விட்டு படையினர் கொள்ளை

### மட்டக்களப்பு ரயிலில் சம்பவம்

கொழும்பு, ஏப். 3

பொலநறுவை - மட்டக்களப்பு ரயிலில் பயணம் செய்த பொலீஸ்காரர் ஒருவரை தாக்கிவிட்டு அவரிடமிருந்து நகைகள், பணம் ஆகியவற்றை அபகரித்துச் சென்ற இரு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விடுமுறையை முடித்துக்கொண்டு, வாழைச்சேனை பொலீஸ் நிலையத்திற்கு கடமைக்காக சென்று கொண்டிருந்த சாந்த விமலரட்ண என்ற பொலீஸாரே இவ்வாறு இராணுவத்தினரால் தாக்கப்பட்டு பொருள்களைப் பறிகொடுத்தார்.

சுமார் 14ஆயிரத்து 700ரூபா பெறுமதியான நகை மற்றும் 2ஆயிரத்து 500ரூபா பணம் என்பன இவரிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அன்றைய தினம் அந்த ரயிலில் கடமையாற்றிய இரு இராணுவத்தினர் மீது குற்றஞ்சாட்டி வாழைச்சேனை பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம் முறைப்பாட்டை விசாரித்த மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி இராணுவத்தினர் இருவரையும் பொலீஸ் பாதுகாப்பில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார். [ஐ-5-4]

## பயிர்கள் கருகும் நிலையில்

தென்மராட்சி ஏப். 3

தென்மராட்சிப் பிரதேசத்தில் நெல் அறுவடை செய்யப்பட்ட பின் பயிரிடப்பட்ட சிறு தானியப் பயிர்கள் மழை இல்லாததால் வரட்சி ஏற்பட்டு கருகிவிடும் நிலையில் உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ஒ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். றோட்டறிக்கழகம்
இன்ரறக்ட் கழகத்
தலைவர்களுக்கான

## விசேட கூட்டம்

இடம்: யாழ். இந்துக் கல்லூரி
காலம்: 05-04-95 புதன் மாலை 4.00 மணி

அனைத்து இன்ரறக்ட் கழகத் தலைவர், செயலாளர்கள் தவறாது கலந்துகொள்ளவும்.

இளைஞர் சேவை இயக்குநர்
யாழ். றோட்டறிக் கழகம்

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-889)



யாழ்.
றோட்டறிக் கழகம்

றோட்டறக்ற்
அங்கத்தவர்களுக்கான

## விசேட கூட்டம்

இடம்: யாழ். மிட்ரவுண் றோட்ட றக்ற் கழக மண்டபம்
83, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
காலம்: 04-04-1995 செவ்வாய், பிற்பகல் 7.00 மணி

அனைத்து றோட்டறக்ற் கழகத் தலைவர்கள், செயலாளர்கள், இயக்குநர்கள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளவும்.

விடயம்: றோட்டறக்ற் தலைமைத்துவக் கருத்தரங்கு.

இளைஞர் சேவை இயக்குநர்
யாழ். றோட்டறிக் கழகம்

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/888)


## மரண அறிவித்தல்கள்

### செல்வன்
### சிதம்பரப்பிள்ளை மகாதேவன்

காரைநகர் அறுகம்புலத்தைச் சேர்ந்தவரும், நொச்சியாகம வர்த்தகருமான சிதம்பரப்பிள்ளை வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகன் மகாதேவன் 1-4-95 அன்று சுவிஸில் அகாலமரணமானார்.

இவர் நித்தியானந்தன், றங்கநாதன், தர்மலிங்கம் [நொச்சியாகம], ஜெகநாதன் [வவுனியா], சிவசிதம்பரம் [லண்டன்], செல்வராசா [லண்டன்], சிவகலை [யாழ்ப்பாணம்] ஆகியோரின் அருமைச் சகோதரரும், நாகேஸ்வரி, யோகராணி, கோமதி, சிவனேஸ்வரி [வவுனியா], பவானி [லண்டன்], யோகலிங்கம் [மலர் ரெகஸ் யாழ்ப்பாணம்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. யோகலிங்கம்
மைத்துனர்

No 5, சிறாம்பியடி லேன்,
யாழ்ப்பாணம்.
(36020)

### திருமதி தம்பிஐயா புவனேஸ்வரி

அரியாலை, 152, நெடுங்குளம் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தம்பிஐயா புவனேஸ்வரி 02-04-95 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயாவின் [முன்னாள் ஊழியர், தபால் தந்தி திணைக்களம்] துணைவியாரும், காலஞ்சென்ற வைத்தியலிங்கம் - இராசம்மா தம்பதியரின் புதல்வியும், யோகம்மா, குமாரசுவாமி, மகேஸ்வரி சபாரட்ணம் ஆகியோரின் சகோதரியும், சிற்றம்பலம் [லண்டன்], சறோஜினி சுந்தரலிங்கம் [யாழ் மாநகரசபை], சந்திராதேவி [லண்டன்], வரதன் [லண்டன்], யெகசோதி [லண்டன்], வசந்தா [பிரான்ஸ்], ரகுநாத் [கனடா] ஆகியோரின் அருமைத் தாயாரும், புவனராணி [லண்டன்], சுந்தரலிங்கம் [காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை], புவனேஸ்வரி [லண்டன்] கனகலிங்கம் [லண்டன்], தேவராசா [பிரான்ஸ்], சுவேந்தினி [கனடா] ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று (03-04-1995) நடைபெற்று பூதவுடல் காலை 9.00 மணியளவில் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
த. சுந்தரலிங்கம்.
(மருமகன்)

இல. 150 நெடுங்குளம் வீதி
அரியாலை,
யாழ்ப்பாணம்.
[36016]

### செல்லத்துரை திருநாவுக்கரசு
[றோசா தோட்டம் உடுவில்]

உரும்பராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வதிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை திருநாவுக்கரசு நேற்று காலமானார்.

இவர் உமாதேவியின் அன்புக் கணவரும், ஜெயந்தன், ஜெகன் [கொக்குவில் இந்துக் கல்லூரி] ஆகியோரின் தந்தையும், விக்னேஸ்வரன் நடேசலிங்கம், மகேந்திரவர்மன், திலகவதி விக்னேஸ்வரி, ராணி மலர், சற்குணவதி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை 4-4-95 மு.ப. 10மணி அளவில் பூவோடை மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயந்தன்
[மகன்]

சிங்கம் வீதி,
உடுவில்
(36019)

# கணணிகளை இயக்கும் பொருள்கள் எடுத்துவர படை அனுமதி மறுப்பு!

## கப்பலில் ஏற்றப்பட்டு இறக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப். 3

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடன் கொழும்பு துறைமுகத்தில் கப்பலில் ஏற்றப்பட்ட கணணிகளை இயக்குவதற்குத் தேவையான பொருள்கள் கடற்படையினரால் மீளவும் கப்பலில் இருந்து இறக்கப்பட்டதாக தெரிய வந்தது.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு கணணிகள் இயக்குவதற்கு தேவையான ரோணர், டிஸ்க், கம்பியூட்டர் தாள்கள் போன்ற பொருள்கள் 5 பெட்டிகளில் கொழும்பு துறைமுகத்தில் வைத்து கப்பலில் ஏற்றப்பட்டதாகவும் —

பின்னர் கடற்படை அதிகாரியின் பணிப்பின் பேரில் அந்தப் பெட்டிகள் கப்பலில் இருந்து இறக்கப்பட்டதாகவும் — தெரியவந்தது.

இந்தப் பொருள்கள் நீண்டகாலமாக கொழும்பில் உள்ள பல்கலைக்கழக களஞ்சியத்தில் தேங்கிக் கிடந்தன.

பின்னர் பாதுகாப்பு அமைச்சு அளித்த அனுமதியின் பிரகாரம் அவை கப்பலில் ஏற்றப்பட்டதாகவும் —

கடற்படை அதிகாரி தடுத்ததையடுத்து அவை மீண்டும் பல்கலைக்கழக களஞ்சியத்திற்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஐ-3]

## முச்சக்கர வண்டி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 3

நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் வலுகுறைந்த இருவருக்கு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நோயாளர் நலன் புரிச்சங்க நடுவப் பணியகத்தில் வைத்து இரு முச்சக்கர வண்டிகள் வழங்கப்படும். (இ-7)

## மருத்துவ கண்காட்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடமும், விஞ்ஞான மன்றமும் இணைந்து நடத்தும் மருத்துவக் கண்காட்சி நேற்றுக் காலை யாழ். பல்கலைக் கழக பதில் உபவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் நோயாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி எஸ். சிவபாலனும், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி நவமலர் கனகரட்ணமும் பங்குகொண்டு மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட வளாகத்தில் நடைபெறும் இக்கண்காட்சி ஒன்பது தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

கண்காட்சியைப் பார்வையிட நீண்டநேரம் எடுக்கும் என்பதால் கண்காட்சியைப் பார்வையிட வரும் பாடசாலை மாணவர்கள் தம்முடன் மதிய உணவையும் எடுத்துவருமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். [இ-7-14-111]

## முழு நாள் தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஏப். 3

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி தமிழ்ச்சங்கத்தின் தமிழ் விழாவும், மலர் வெளியீடும் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளன.

நிகழ்ச்சிகள் இருவேளையாக காலையிலும், மாலையிலும் இடம்பெறும்.

காலை நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாசும், சிறப்புவிருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையும் பங்குபற்றுவர்.

பிற்பகல் நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகவும் எழுத்தாளர் திரு. க. சொக்கலிங்கம் (சொக்கன்) சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

காலை நிகழ்வின் போது „சங்கம்" மலர் வெளியீடு, நடனம், இசையரங்கு, நாடகம் என்பனவும் —

பிற்பகல் நிகழ்வின் போது பரிசில் வழங்கல், இசை நாடகம், கவியரங்கம், பட்டிமண்டபம் என்பனவும் — சிறப்பு நிகழ்ச்சிகளாக அமையும். (அ)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று நடைபெறும் போட்டியில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ புனிதநீக்கிலாஸ் வி. க எதிர் அறிவெளி வி க.
இடம்:-மட்டுவில் ம.வி.

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி
# ஜெனரேட்டரை இயக்க போதிய டீஸல் இல்லை

சாவகச்சேரி ஏப். 3

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையின் மின்சார தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மின் பிறப்பாக்கி வழங்கப்பட்டிருக்கின்ற போதிலும் போதிய எரிபொருள் இல்லாததால் அதன் முழுமையான பயன்பாட்டினை பெற முடியாத நிலை உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மின் பிறப்பாக்கி தொடர்ந்து ஒரு நாள் (இரவு பகல்) இயங்க சுமார் 65 லீற்றர் டீசல் தேவை.

இதேவேளை வைத்திய சாலையின் உள்ளக மின்சுற்றுக்களின் திருத்த வேலைகள் இன்றும் பூர்த்தியாக்கப்படவில்லை. இவ் வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்டதும் மின் பிறப்பாக்கியை முழு அளவில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-31)

# வெப்பத்தால் நோய்கள் குடாநாட்டில் அதிகரிப்பு

## கால்நடைகளும் பாதிப்பு

வல்வெட்டித்துறை, ஏப் 3

தொடர்ந்து நீடித்து வரும் கடும வெப்பம் காரணமாக, வெப்பத்தினால் பரவும் பல வகை நோய்கள் யாழ் குடாநாட்டில் அதிகரித்து வருகின்றன.

சின்னமுத்து, கூவைக்கட்டு போன்ற நோய்களினால் நாள் தோறும் பலர் பீடிக்கப்படுகின்றனர்.

இந்த கடும் வெப்பம் மக்களை மட்டுமல்ல கால்நடைகளையும் தாக்கி வருகின்றது.

கடும் வெப்பம் காரணமாக கோழிகள், தூக்கநோய்க்கும், நாய்கள் விசர் நோய்க்கும் உள்ளாகின்றன. (5-155)

## ஆலயங்களில்

மறவன்புலோ, நிக்தர்புலம் பதி அருள்மிகு செல்வமுத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில், பங்குனித் திங்களான இன்று பகல் 1008 சங்காபிஷேகமும், அதனைத் தொடர்ந்து அன்னதானமும் இடம்பெறும். இரவு, திருவிழாவும் நடைபெறும் (5)

★ ★ ★

நல்லூர் பண்டாரக் குளம் மருதவளவு அருள்மிகு ஸ்ரீவிநாயகர் ஆலய உர்சவத்தை முன்னிட்டு ஆலய தர்மகர்த்த சபையினரும் யாழ் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தினரும் இணைந்து வழங்கும் செய்வீக இசையரங்கில் இன்று திங்கட்கிழமை இரவு 8மணிக்கு திருமதி வரதவாணி விவேகானந்தனின் மாணவிகளின் வீணை இசையும் திரு. எஸ். கருணாகரனின் பாட்டும் இடம்பெறும் ஐ

## பாடசாலைகளில்

வகிரிவடக்கு மெதடிஸ்த தமிழ்த் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. சதானந்தன் தலைமையில் நடைபெறும்.

கரவெட்டிக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. சிவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். [ஐ 5-155]

## அன்னை பூபதி பொது அறிவு தேர்வு முடிவு

யாழ்ப்பாணம், ஏப் 3

தற்கொடையாளி அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வின் முடிவுகளை பாடசாலைகளின் அதிபர்கள் தத்தமது கல்விக் கோட்டத்தில் இன்று திங்கட்கிழமை பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னரே, அறிவிக்கப்பட்டபடி மாணவர்களின் தேர்ச்சி அறிக்கையில் இப்புள்ளிகளையும் சேர்த்து சராசரி காணப்பட்டு நிலை போடப்பட்... [illegible]

## வாகன...

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பத் தடை ஊசி போட்டிருந்தார்.

ஆனால் கடந்த வாரம் இவ்வேளை திடீரென அவருக்கு ஏற்புவலி ஏற்பட்டது.

அவரை ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்ல வாகனம் ஒன்றைப் பெற முடியவில்லை.

பின்னர் அதிகாலை 4 மணி அளவில் ஒருவாறு அவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல முடிந்தது ஆனால் அந்தப் பெண் வழியில் மரணமானார்.

மிருசுவில் ஆர்த்தடியைச் சேர்ந்த நவரத்தினம் நல்லதங்கம் (வயது 47) என்ற இரு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு பரிதாபமாக மரணமானார். [illegible]

## நாட்டின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மேற்கொள்ளப்படவில்லை.

விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் ஈழம் கோரிக்கையை கைவிட்டு அதிகாரப் பரவலாக்கல் நடை முறையை ஏற்றுக் கொள்வதாக முதன் முதலாக அறிவித்துள்ளார்கள். இந்த அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த அரசு தயாராக உள்ளது

சமாதான முயற்சிகளிலும், அதிகாரப் பரவலாக்கலிலும் இந்த நாட்டில் வாழும் எல்லா இன மக்களின் கருத்துகளுக்கு இடமளிக்கப்படும்—

இப்படி சந்திரிகா மேலும் கூறினார். (இ-3-7)

## தமிழக—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரம் குறித்து அகில இந்திய இந்திரா காங்கிரஸ் தலைவருக்கு இன்னும் ஓரிரு நாட்களில் அறிக்கை சமர்ப்பிக்கப் போவதாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. குமரி அனந்தன் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினையில் அரசியல் மரபுகள் காக்கப்பட வேண்டும் என்று மத்திய தொழில்துறை இணை அமைச்சர் திரு. எம். அருணாசலம் தெரிவித்தார்

இது குறித்து அவர் நேற்று விடுத்த அறிக்கையில் மகாராஷ்டிர முன்னாள் முதல்வர் திரு ஏ. ஆர். அந்துலே பதவி விலகி வழக்கை சந்தித்தது போன்று செல்வி ஜெயலலிதாவும வழக்கை எதிர்கொண்டு ஜனநாயக மரபைக் காக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார் [இ-7]

## 12 ஆயிரம...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எஞ்சிய 12 ஆயிரம் பேரும் இலங்கைக்கு திருப்பியனுப்பப் படுவர்—

இப்படி சுவிஸ் குழுவினர் பேட்டியளிப்பில் தெரிவித்தனர். (இ-3)

# மெலிந்த உடலை விரும்பும் பிரிட்டிஷ் சிறுவர்கள்!

## டாக்டர்கள் அதனால் கவலை

லண்டன் ஏப். 03

தாம், மெலிந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற சிந்தனை பிரிட்டனில் உள்ள 6 வயது சிறுவர்களிடம் காணப்படுகிறது.

இது தமக்கு மிகுந்த அதிர்ச்சியையும், கவலையும் தருவதாக அங்குள்ள டாக்டர்கள் தெரிவிக்கின்றனர்.

பிரிட்டிஷ் சிறுவர்கள், தங்கள் நிறை அதிகரித்து விடுமோ என பெரும் அச்சம் கொண்டிருப்பதாகவும்—

ஆரம்ப பாடசாலையில் இருந்து வெளியேறியது முதலே தாம் உண்ணும் உணவின் அளவினை அவர்கள் பெருமளவு குறைத்து விடுவதாகவும் தெரிய வருகிறது.

மெலிந்த தோற்றத்தைக் கொண்ட பெண்களை, அடிக்கடி அவர்கள் தொலைக்காட்சியில் பார்ப்பதனாலும்.

பெற்றோர்கள் தமது எடை குறைந்திருக்க வேண்டும் என்று கவலை தெரிவிப்பதனாலும் இச்சிறுவர்களும் தாம் மெலிந்து இருக்க வேண்டும் என்று விருப்பங் கொள்கிறார்கள் என ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

(ஐ-5)

# றோட்டறி கழகம் நடத்திய கட்டுரை, பேச்சு போட்டி

## எதிர்வரும் சனியன்று பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 3

சர்வதேச றோட்டறி அமைப்பின் 90 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி பாடசாலை மாணவர்களிடையே யாழ். றோட்டறிக் கழகம் நடத்திய பேச்சு, கட்டுரைப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ், ஆங்கில மொழி மூலம் நடத்தப்பட்ட அந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர் விவரம் வருமாறு:-

**பேச்சுப் போட்டி**

தமிழ்மொழி மூலம் —

★ முதலாம் இடம் — ம. பிரவீணன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

★ இரண்டாம் இடம் — செல்வி பகீர்தா இராமநாதன் (செஞ்சோலை மகளிர் பாடசாலை மட்டுவில்)

★ மூன்றாம் இடம் — ந. குகபரன் (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), த. சுஜீவன் (யாழ். இந்துக் கல்லூரி)

ஆங்கிலமொழி மூலம் —

★ முதலாம் இடம் — செல்வி ரஜிநா காந்தரட்ணம் உடுவில் மகளிர் கல்லூரி)

★ இரண்டாம் இடம் — செல்வி வித்தியானி ஜெரிமையா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

★ மூன்றாம் இடம் — கு. ஸ்கந்தராஜ் (யாழ். இந்துக் கல்லூரி), தே சேத்திரபாலன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

**கட்டுரைப் போட்டி**

தமிழ்மொழி மூலம் —

★ முதலாம் இடம் - செல்வி சிவாம்பா சிவநாதன் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

★ இரண்டாம் இடம் — பிரவீணன் [தெல்லிப்பழை யூனியன் கல்லூரி]

★ மூன்றாம் இடம்— செல்வன் பிரியதீபன் (யாழ். மத்திய கல்லூரி)

ஆங்கில மொழி மூலமான போட்டிக்கு போதிய போட்டியாளர்கள் கலந்து கொள்ளாததால் நடைபெறவில்லை.

மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ள யாழ் றோட்டறிக் கழகத்தின் 54 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும். [ஐ]

## 4 ஆம் கட்ட ---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைக்கு விரைவில் அரசு தூதுக் குழுவினரை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை தெரிவிக்கும்படியும்—

விடுதலைப் புலிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்,

விடுதலைப் புலிகள் தங்கள் காலக் கெடுவை எதிர்வரும் 19 ஆம் திகதி நீடித்துள்ளதான அறிவிப்புக் குறித்து அரசின் கடிதத்தில் ஏதும் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று அவரிடம் கேட்டபோது -

அவ்வாறான விடயங்களை அரசு கடிதங்களில் பரிமாறிக் கொள்வதில்லை என்று அவர் பதிலளித்தார்.

வேறு தகவல்களை அமைச்சர் வெளியிடவில்லையெனினும்—

அரசின் பதில் கடிதத்தில் நான்காம் கட்டப் பேச்சுவார்த்தைக்கான திகதி குறிப்பிடப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது

பேச்சுவார்த்தையின் போது அரசியல்தீர்வு குறித்து ஆராயப்படும் சாத்தியம் குறித்தும் அரசின் பதில் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(அ-3)

## மரத்தால் விழுந்து மரணம்

அளவெட்டி, ஏப். 3

கடந்த வெள்ளிக்கிழமை கள் சீவுவதற்காக மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் மரத்தில் இருந்து தவறி விழுந்து மயக்கமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின் அங்கு மரணமானார்,

கொக்குவில் பிடாரி வீதியைச் சேர்ந்த கனகர் தங்கராசா (வயது 38) என்பவரே மரணமானவர் ஆவர்.

[ஐ-5-13]


★ மலிவு விற்பனை ★

✶ றெடிமேட் ட்ரவுஸர்கள்
✶ ட்ரவுஸர் துணிகள்
✶ சாறி வகைகள்
✶ சில்க பொலியஸ்டர்
✶ பிறின்ரெட் மற்றியல்ஸ்
✶ ரெடிமேட் வகைகள்

இன்னும் பல

கணேசன் பட்டுச் சோலை
201, காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம்.
(36024)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03 - 04 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.